# பாலர் வகுப்புக்குச் செல்லும் வயதிற்கு முன்பான ஒன்ராறியோவின் பேச்சு மற்றும் மொழித் திட்டம்



## உங்கள் பிள்ளையின் பேச்சு மற்றும் மொழி விருத்தி

கிட்டத்தட்ட 10 பிள்ளைகளில் ஒருவருக்குப் பேச்சு மற்றும் மொழித் திறன்களை வளர்ப்பதற்கு மேலதிக உதவி தேவை. உதவி இல்லாமல், காதுகொடுத்துக் கேட்பது, பேசுவது, வாசிப்பது மற்றும் மற்றவர்களுடன் விளையாடுவது இந்த பிள்ளைகளுக்குக் கடினமானதாக இருக்கலாம்.

பிள்ளைகள் பிறந்ததிலிருந்து பாடசாலையை ஆரம்பிக்கும் வரையான சேவைகளை ஒன்ராறியோவின் பாலர் வகுப்புக்குச் செல்லும் வயதிற்கு முன்பான பேச்சு மற்றும் மொழித் திட்டம் (Ontario Preschool Speech and Language Program) வழங்குகிறது. உங்கள் கரிசனைகளைப் பற்றியும், உங்கள் பிள்ளையின் பேச்சு மற்றும் மொழித் திறன்கள் எவ்வாறு வளர்கின்றன என்பதைப் பற்றி மேலும் அறியவும் பேச்சு மொழி நோயியல் நிபுணருடன் கலந்துரையாடுவதற்கான ஒரு உள்ளெடுப்பு சந்திப்பு உங்கள் பிள்ளைக்கான சேவைகள் ஆரம்பிக்கின்றன. பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சையும் பெற்றோருக்கான பயிற்சி மற்றும் ஆதரவும் பிள்ளைகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் மாகாணம் முழுவதும் வழங்கப்படுகிறது.

## பேச்சு மற்றும் மொழித் திறன்கள் ஏன் மிகவும் முக்கியமானவையாக இருக்கின்றன

ஒலிகள், சொற்கள் மற்றும் வாக்கியங்களைப் பயன்படுத்தி ஆராய்தல், விளையாடல், சுட்டிக்காட்டல் மற்றும் பேசுதல் மூலம் எப்படித் தொடர்புகொள்வது என்பதை உங்கள் பிள்ளை கற்றுக்கொள்கிறார்.

இந்தச் செயல்பாடுகள் யாவும் உங்கள் பிள்ளையின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் முக்கியமானவையாகும். உங்கள் பிள்ளையில் இந்தத் திறன்கள் விருத்தியடையடைவதற்கு உதவுவதில் நீங்கள் முக்கிய பங்கு வகிக்கிறீர்கள். பேசுதல், வாசித்தல் மற்றும் விளையாடல் உள்ளடங்கலான உங்கள் பிள்ளையுடனான நேருக்கு நேரான ஊடாட்டங்கள் உங்கள் பிள்ளையின் தொடர்புத் திறன்களை வளர்க்க உதவிசெய்கின்றன.

(பின்பக்கத்தில் தொடர்கிறது)

பாடசாலையை ஆரம்பிப்பதற்கான நேரம் வரும்போது, நண்பர்களை உருவாக்குவதற்கு, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, வாசிப்பது மற்றும் எழுதுவது எப்படியெனக் கற்றுக்கொள்வதற்கு இந்தத் திறன்களை உங்கள் பிள்ளை பயன்படுத்துவார்.

## நான் எங்கே மேலும் கற்றுக்கொள்ள முடியும்?

உங்கள் பிள்ளையின் பேச்சு மற்றும் மொழித் திறன் குறித்து உங்களுக்கு கேள்விகள் அல்லது கரிசனைகள் இருந்தால், பாலர் பேச்சு மற்றும் மொழித் திட்டத்தைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் மருத்துவரிடமிருந்து பரிந்துரைப்பு உங்களுக்குத் தேவையில்லை. ஆரோக்கியமான விருத்திக்கான சிறப்பான வாய்ப்பை உங்கள் பிள்ளைக்கு வழங்குவதற்காக, அவரின் தொடர்பாடல் திறன்களை வளர்த்துக் கொள்ள நீங்கள் எப்படி அவருக்கு உதவலாம் என்பதைத் திட்டப் பணியாளர்கள் உங்களுக்குக் கற்பிக்க முடியும்.

மேலும் தகவலுக்குத் தயவுசெய்து பார்வையிடுங்கள்:
**ontario.ca/preschoolspeech**